பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 06 2026** **12 40**

திங்கட்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லி வந்துள்ள மியான்மர் அதிபருடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தி வருகிறார்.

**2.** பிரதமரின் ஸ்வநிதி திட்டம் வெற்றிகரமாக **6** ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

**3.** நாட்டில் **10** மாநிலங்களில் காலியாக உள்ள **24** மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

**4.** உச்சநீதிமன்றத்திற்கு **5** புதிய நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**5.** மேற்குவங்கத்தில் **35** புதிய அமைச்சகர்ளுடன் அம்மாநில அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

புதுதில்லி வந்துள்ள மியான்மர் அதிபர் திரு. **U Min Aung** இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து தற்போது பேச்சு நடத்தி வருகிறார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்றுச் சிறப்பு மிக்க கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், பாதுகாப்பு, தொழில்நுட்பம் உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தி வருகின்றனர்.

மியான்மர் அதிபர் இன்று மாலை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளார்.

நாட்டின் புராதன சின்னங்கள் குறித்த “ஒளியும் - தாமரையும்” கண்காட்சியையும் அவர் பார்வையிடுகிறார்.

<<<<>>>>

இந்தியா - ஓமன் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் இன்று நடைமுறைக்கு வந்துள்ளது.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இந்த ஒப்பந்தம் குறித்து நாளேடு ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் தூதரக உறவுகள் வலுப்பெறும் என்று தெரிவித்துள்ளார்.

இந்திய மாணவர்கள் கைவினைக் கலைஞர்கள், பெண்கள், விவசாயிகள், மீனவர்கள், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்

நிறுவனங்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளதாக திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

<<<<>>>>

பிரதமரின் சாலையோர வியாபாரிகள் கடனுதவி திட்டம் தொடங்கப்பட்டு 6 ஆண்டுகள் நிறைவடைகிறது.

இத்திட்டத்தின்கீழ் லட்சக்கணக்கான வியாபாரிகள் பயன் பெற்றுள்ளனர்.

கடந்த 2020ஆம் ஆண்டு முதல் ஒரு கோடியே 12 லட்சத்துக்கும் மேற்பட்ட கடன்கள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன.

75 லட்சத்துக்கும் மேற்பட்ட நகரங்கள் மற்றும் சிறுநகரங்களில் 75 லட்சத்துக்கும் மேற்பட்ட சிறு வியாபாரிகள் பயன்பெற்றுள்ளனர்.

17 ஆயிரத்து 800 கோடி ரூபாய் பயனாளிகளுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

55 லட்சத்துக்கும் மேற்பட்ட பயனாளிகள் கணினி கட்டமைப்பின் மூலம் கடன் தொகை பெற்று திருப்பிச் செலுத்தி வருகின்றனர்.

இதனால் 241 கோடி மின்னணு பணப் பரிவர்த்தனை மூலம் 8 லட்சத்து 96 ஆயிரம் கோடி ரூபாய் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

மின்னணு திட்டத்தில் பயன்பெறும் சிறு வியாபாரிகளுக்கு வட்டி மானியம் உள்ளிட்ட சலுகைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் ஏழை, எளிய, சிறு வியாபாரிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்து வருவதையடுத்து, 2030ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் ஸ்வநிதி திட்டம் 6 ஆண்டு காலம் நிறைவு செய்திருப்பதையொட்டி வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வெளியிட்டுள்ள செய்தியில், கடின உழைப்பை அளிக்கும் லட்சக்கணக்கான சாலையோர வியாபாரிகள் தற்சார்பு நிலையை எட்டுவதற்கு இத்திட்டம் முக்கிய பங்காற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

உத்தரவாதமின்றி சிறு வியாபாரிகளுக்கு வழங்கப்படும் கடனுதவி புதிய இந்தியாவை வலுப்படுத்தியுள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டில் 10 மாநிலங்களில் காலியாக உள்ள 24 மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

இதற்கான தேர்தல் இம்மாதம் 18ஆம் தேதி நடைபெற உள்ளது.

இன்று வெளியிடப்பட்ட இதற்கான அறிவிக்கையில் ஆந்திரப்பிரதேஷ், கர்நாடகா, குஜராத் மாநிலங்களில் தலா 4 இடங்களுக்கும், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசத்தில் தலா 3 இடங்களுக்கும், ஜார்கண்டில் 2 இடங்களுக்கும், மணிப்பூர், மேகாலயா, அருணாச்சலப்பிரதேசம், மிசோரம் மாநிலங்களில் தலா ஒரு இடத்திற்கும் தேர்தல் நடைபெற உள்ளது.

மதச்சார்பற்ற ஜனதாதள தலைவர் திரு. ஹெச்.டி. தேவேகவுடா, பிஜேபி மூத்த தலைவர்கள் திரு. ஜார்ஜ் குரியன், திரு. ரவ்நீத் சிங், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே ஆகியோரின் பதவிக் காலம் முடிவடைய உள்ள நிலையில், இந்த தேர்தல் நடைபெறுகிறது.

மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் ஒடிசா மாநிலங்களில் காலியாக உள்ள தலா ஒரு இடங்களுக்கு மாநிலங்களவை உறுப்பினர் இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் இன்று தொடங்கியுள்ளது.

மகாராஷ்டிராவில் துணை முதலமைச்சர் திரு. சுனித்ரா அஜித் பவார், தமிழகத்தில் திரு. சி.வி. சண்முகம், ஒடிசா பிஜு ஜனதாதள் உறுப்பினர் திரு. **Debasish Samantray** ஆகியோர் மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளதையடுத்து, அந்த இடங்களுக்கும் இதே கால அட்டவணைப்படி இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

<<<<>>>>

உச்சநீதிமன்றத்திற்கு **5** புதிய நீதிபதிகளை நியமிக்க குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்துள்ளதாக சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமன குழு பரிந்துரை செய்த **5** பேருக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

பஞ்சாப், ஹரியானா தலைமை நீதிபதி **Sheel Nagu**, மும்பை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஸ்ரீசந்திரசேகர், மத்தியப்பிரதேச உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி **Sanjeev Sachdeva**, ஜம்மு-கஷ்மீர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி **Arun Palli** மற்றும் மூத்த வழக்கறிஞர்

வெங்கட சுப்ரமணி மோகனா ஆகியோர் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான நீதிபதி நியமனக் குழு இது தொடர்பாக கடந்த 27ஆம் தேதி இவர்களின் பெயர்கள் பரிந்துரை செய்திருந்தது.

உச்சநீதிமன்றத்தில் தற்போது 37 நீதிபதிகள் உள்ளனர்.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் 35 புதிய அமைச்சகர்ளுடன் அம்மாநில அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் திரு. ஆர்.என். ரவி புதிய அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்து வைத்தார்.

நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி மற்றும் முக்கிய அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

புதிய அமைச்சரவையில் திரு. Swapan Das Gupta, திரு. அருண் சிங், திரு. Tapas Rai, திரு. சங்கர் கோஷ் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>

ஐ.ஐ.டி.-யில் சேர்வதற்கான **JEE Advance** நுழைவுத் தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

ஐஐடி தில்லி மண்டலத்தை சேர்ந்த **Subham Kumar 330** மதிப்பெண்கள் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

நடப்பாண்டுக்கான **JEE Advance** நுழைவுத் தேர்வில் ஒரு லட்சத்து **79** ஆயிரத்து **694** மாணவர்கள் தேர்வெழுதினர்.

இதில் **56** ஆயிரத்து **880** மாணவர்கள் தேர்வாகியுள்ளனர்.

<<<<>>>>

சென்னையில் வணிக பயன்பாட்டுக்கான எரிவாயு சிலிண்டரின் விலை இன்று **42** ரூபாய் அதிகரித்துள்ளது.

இதன்படி எரிவாயு சிலிண்டரின் விலை மூவாயிரத்து **283** ரூபாயாக உள்ளது.

தில்லியில் **42** ரூபாயும், மும்பையில் **43** ரூபாய் **50** காசும், கொல்கத்தாவில் **53** ரூபாய் **50** காசுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேற்காசிய பிரச்சினை காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்ததையடுத்து வணிகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விலை உயர்ந்துள்ளது.

இருப்பினும் வீடுகளில் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை உயர்த்தப்படவில்லை.

<<<<>>>>

பிரதமரின் ஜன்தன் யோஜனா திட்டம் சேலம் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின்கீழ் ஏராளமானோர் பயனடைந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Vijayakumar - 70 Sec)**

<<<<>>>>

ஈரான் நாட்டின் ரேடார் மற்றும் ட்ரோன் கட்டுப்பாட்டு மையங்களைக் குறிவைத்து அமெரிக்கா வான்வழித் தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

இதனையடுத்து மேற்காசியப் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் அமெரிக்காவின் MQ-1 ட்ரோனை ஈரான் படைகள் தாக்கி அழித்ததற்கு பதிலடியாக அமெரிக்கா இன்று பதில் தாக்குதல் நடத்தியுள்ளது.

அமெரிக்காவில் இருந்து வரும் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலில் ஈரான் படைகள் தடுத்து வருகின்றன.

அமெரிக்காவின் தாக்குதலைத் தடுக்கும் நடவடிக்கையை மட்டுமே ஈரான் நடத்தி வருவதாகவும், பொதுமக்கள் அரசு அறிவிக்கும் பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைபிடிக்குமாறும் அந்நாட்டு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

மலேசியாவில் 16 வயதுக்குட்பட்ட சிறார் சமூக வலைதள கணக்குகளை தொடங்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது அந்நாட்டில் உள்ள 80 லட்சத்துக்கும் மேற்பட்ட சமூக வலைதள கணக்குகளை வைத்திருப்போரின் வயது குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் சமூக வலைதள முகப்புகளை அமைப்பதில் சில கட்டுப்பாடுகளும் கொண்டுவரப்பட்டுள்ளது.

தவறான நோக்கத்துடன் வலைதளங்களை அணுகுவதை தடுக்கும் நோக்கில் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

16 வயதுக்குட்பட்டோரை அனுமதிக்கும் சமூக வலைதள நிறுவனங்களுக்கு அதிக அளவில் அபராதம் விதிக்கப்படும் என்றும் மலேசிய அரசு எச்சரித்துள்ளது.

சிறுவர்களை திசைதிருப்பும் வகையில் சமூக வலைதளங்களில் பதிவிடுவோரையும் கண்காணித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மலேசிய அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

ஆப்ரிக்காவில் காங்கோ மற்றும் உகாண்டா நாடுகளில் பரவி வரும் எபோலா வைரஸ் தொற்றை எதிர்கொள்ள மருத்துவ உதவிகள் வழங்கிய இந்தியாவிற்கு ஆப்பிரிக்க மருத்துவ முகமை நன்றி தெரிவித்துள்ளது.

இக்கட்டான சூழலில் ஆப்பிரிக்க நாடுகளுக்கு உதவிய இந்திய அரசுக்கும், மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அந்த முகமை கூறியுள்ளது.

**<<<<The End>>>>**